**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.839/2022**
**Prosecution Witnesses: 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஸ்ரீதர் | Caste | : |
| Father Name/ Husband Name | : சந்திரசேகர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(16.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் ஈரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் கதிரியக்க பாதுகாப்பு அலுவலராக பணி செய்து வருகிறேன். அ.சா.1 கலைவாணி என்பவர் நான் மதுரையில் பணிபுரிந்த போது என்னுடன் பணி செய்து வந்தார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு பெருங்குடி ஏர்போட் ரோடு செல்லும் பகுதியில் அ.சா.1 கலைவாணி வீட்டு அருகே நான் குடியிருந்து வந்தேன். அப்போது ஒரு நாள் தேதி மாதம் வருடம் நினைவு இல்லை. மாலைநேரத்தில் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்த போது அ.சா.1 கலைவாணி சத்தம் போட்டுக்கொண்டே இருந்தார். யாரோ ஒருவர் கலைவாணி அருகே இருந்தார். அந்தநபர் கலைவாணியிடம் தவறாக நடக்க முயற்சித்தாக கலைவாணி கூறினார். அந்த யாரோ ஒரு நபர் ஆஜர் எதிரியா என்றால் நிறைய வருடங்கள் ஆனதால் எனக்கு நினைவு இல்லை. நானும் எனது பக்கத்து வீட்டில் இருந்த ஒரு நபரும் சென்று சம்பவம் பற்றி கூறினோம். சிறிது நேரத்தில் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து என்னிடம் விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 13.07.2021 அன்று இரவு 8.30 மணியளவில் அ.சா.1 கலைவாணி தனது வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி அ.சா.1 ன் வீட்டிற்குள் வந்து அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் பேசி அடித்துக்காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து அ.சா.1 ஐ பெண் என்றும் பாராமல் வன்கொடுமை செய்தார் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.839/2022**
**Prosecution Witnesses: 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபுதாஸ் | Caste | : |
| Father Name/ Husband Name | : ஞானவரம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(16.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் டி.வி மெக்கானிக்காக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2021 வது வருடம் போலிசார் எனது தெருவுக்கு பக்கத்து தெருவான இந்திராநகரில் வந்து விசாரித்தார்கள். சாட்சிக்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

நான் போலிசார் விசாரணையின் போது சம்பவ இடத்தை பார்வை இட்டு வரைபடம் வரைந்து அது சமயம் தயார் செய்து பார்வை மகசரில் கையொப்பம் செய்ததாக சொல்லி விட்டு தற்சமயம் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.839/2022**
**Prosecution Witnesses: 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துராமலிங்கம் | Caste | : |
| Father Name/ Husband Name | : அய்யாச்சாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(16.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2021 வது வருடம் போலிசார் எனது தெருவுக்கு பக்கத்து தெருவான இந்திராநகரில் வந்து விசாரித்தார்கள். சாட்சிக்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

நான் போலிசார் விசாரணையின் போது சம்பவ இடத்தை பார்வை இட்டு வரைபடம் வரைந்து அது சமயம் தயார் செய்து பார்வை மகசரில் கையொப்பம் செய்ததாக சொல்லி விட்டு தற்சமயம் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி.** இல்லை